N. SABHAPATHI, B.A.,
NEWS AGENT,
KUMBAKONAM.

பூத்துவரும் புதுயுகமே! பொசுக்குகிறார், ஆச்சாரியார்!

திராவிடநாடு

மலர் 11 | 7—6—53 | இதழ் 49

விலை 2 அணா

கண்ணைக் குத்துகிறார்
கை கால்களை வெட்டுகிறார்

எதிர்காலத்தை இருட்டுக்குள் பூட்டுகிறார்

வர்ணாச்சிரமம் வாழவேண்டுமாமே!

காங்கிரஸ் தோழர்காள், கவனியுங்கள்

தோற்றது, காங்கிரஸ்!—என்று, துந்துபி எழுப்பியது, நாடு.

ஆள்கிறது, காங்கிரஸ்!—என்று காட்ட, ஆச்சாரியார் வந்தார்.

ஜனநாயகம், மிதிபடுகிறதே! — என்று, அலட்சியமாகப் பதில் தந்தனர்.

*

கனி பறித்தவனைக் கருநாகம் தீண்டுகிறது—என்று, காங்கிரசல்லாத ஆட்சியை நிறுவும் நிலையிலிருந்த மக்கள் கூறினர்; குமுறினர். "அதனால் என்ன? காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்பு ஆண்டோரெல்லாம், மூளை பலம் இல்லாதவர்கள். இப்போது முழுமதி படைத்தவர் வருகிறார். முதலமைச்சர் யார் தெரியுமோ? ராஜாஜி!!" என்றனர், தேசிய நண்பர்கள்.

*

காலம், ஓடிற்று. மக்கள் மன்றத்தின் அலறல் ஓயவில்லை! காடு—பாலையாயிற்று! கண்ணீர்க் குளம் அதிகமாயிற்று! சோர்வு நீங்கவில்லை! துயரமேகம், கவ்விற்று! 'ஐயோ!'—என்றனர், மக்கள். 'ஆண்டவனைப் பார்!' என்றார், ஆச்சாரியார். 'அடுக்குமோ, ஐயா!'—என்ற முகாரி எழுந்தது, மக்கள் மன்றத்தில். 'பஜகோவிந்தம்! கோவிந்த பஜே!' என்ற மோகனகீதம் ஒலித்தது, ஆச்சாரியாரிடமிருந்து.

*

ஆச்சாரியார், அதிவிவேகி—ஆட்சித் திறமையுடையவர்! அற்புதமான சக்திமிக்கவர்! நிர்வாக இயந்திரம், சரியாகச் சுற்றும்! நீதியும், நேர்மையும், அரசோச்சும்!

இவ்வண்ணம், 'அகவற்பா' தயாரித்து, நாடு முழுமையும் பாடிய தேசிய நண்பர்களே திகைக்குமளவுக்கு, அவருடைய ஆட்சியில் மக்களின் பெருமூச்சு அதிகரித்தது! திகைத்தனர், தேசியத் தலைவர்கள்!! "இடிந்துவிழும் மாளிகைக்கு முட்டுக் கொடுக்க இழுத்துவந்தோம்—கிடைத்த மூங்கில் உளுத்துப் போய் உதிருகிறதே" என்ற சோகம், 'அகவற்பா' பாடிய நண்பர்களிடம் உருவாகியிருக்கிறது. இந்த நிலையை எதிர்பார்க்கவில்லை, ஆச்சாரியார்! — ஆட்சித் தலைவரானால், காங்கிரஸ் கட்சி தண்டனிடும் என்று 'கல்கி'யார் கணித்த ஜாதகத்தை நம்பினார்; ஆனால், பலன் கிடைக்காததோடு, எரிச்சலும் உருவாகத் தொடங்கிவிட்டது.

"இவரை ஏன் இழுத்துவந்தோம்!!" — காங்கிரசாரில் பலரின் கேள்வி, இதுபோது.

"என்னத்தைச் சாதித்துவிட்டார்?" — தேசியத் தோழர்களின் சீற்றம், இப்படி ஒலிக்கிறது.

"சிங்கமென்றோம் — சிறுநரியாயிற்றே!" — ஏடு வைத்திருப்போரின், ஏமாற்றக் குரல், இப்படி.

*

சொந்தக் கட்சியே தூற்றும் நிலை. —ஆச்சாரியார் எதிர்பாராத, இடி இது. என்ன செய்வார்? முறைத்துப் பார்த்தார்! "நான் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஆட்சி நடத்தவில்லை எனது சர்க்கார், காங்கிரஸ் சர்க்கார் அல்ல—தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. நான், விரும்புவது, தர்மராஜ்யம்!" என்று பேசத் துவங்கிவிட்டார்.

திருடனைத் தேள் கொட்டிய நிலையில, தேசியத் தோழர்கள், திகைக்கிறார்கள்! கடித்த கருநாகம், கையை விடாததோடு, கால், மூக்கு, கண், உடல் யாவையும் கொத்த முயலுகிறதே என்று மக்கள் அலறுகிறார்கள்!!

"நான், எக்கட்சியையும் சார்ந்தவனல்ல!"

"பின், நீ, யார்—அரசனா, இந்நாட்டை, ஆள?"

ஆண்டவனின் தூதன். அவன் சார்பில், ஆள்பவன்"

இவ்விதம், புதுக்கொள்கையைப் பேசுகிறார், அன்பர் ஆச்சாரியார். சர்வாதிகாரம் உருவாகும் போர்வையை, சாமர்த்தியமாக எடுத்தணிந்துகொள்ள முயலுகிறார், திருச்செங்கோட்டுவாசி.

'எந்தக் கட்சியைச் சேர்ந்தவனுமல்ல!'—என்று கூறிவிட்டால், எந்தக் கட்சிக்காரனும், குற்றம் குறை காணமுடியாதல்லவா?

*

எந்தக் கட்சியையும் சேர்ந்தவனல்ல—துணிச்சலோடு கூறுகிறார்.

பண்டித நேருவைத் தலைவராகக் கொண்ட இந்திய காங்கிரசும் சரி, காமராஜரைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாட்டுக் காங்கிரசும் சரி, ஏனென்று கேட்கவில்லை. 'எப்படிச் சொன்னாய்?' என்று விளக்கம் கோரவில்லை.

அவரோ, 'நான் ஆண்டவன் பெயரால், ஆட்சி நடத்துகிறேன்' என்று கூறி வருகிறார். அசாவது, 'நானே யாவும்!' எனும் மமதையுள்ளத்தோடு, மனித கூட்டத்தைப் பார்க்கிறார்.

அருமைத் தோழர்காள்! பூத்துவரும் புதுயுகத்தின் ஜீவநாடிகாள்! காண்பீர், ஆச்சாரியாரின் அவதாரத்தை.

மக்கள் மன்றங்களை, எள்ளி நகையாடுகிறார்! மார்தட்டிப் பேசுகிறார்!!

புதுவாழ்வு மலரவேண்டுமெனும் விழைவு கொண்ட வாலிபர்கள், முற்போக்குக் கட்சிகளில் மட்டுமல்ல, காங்கிரஸ் ஸ்தாபனத்திலும் இருக்கிறார்கள். அவர்களையே, அன்புடன் அழைக்கிறோம்! அன்பர்காள்! நண்பர்காள்! ஆச்சாரியாரைப் பாரீர்' என்று.

ஆச்சாரியார், 'தர்மராஜ்யம்' நிறுவப்போவதாகத் தெரிவிக்கிறார்.

தன்னை—புத்தர், இயேசு, ராமானுஜர், சங்கரர், ஆகியவர்களின் பாதையில் செல்லும் ஒருவன் என்று கூறிக்கொள்கிறார்.

புத்தரும் இயேசுவும் ராமானுஜரும் பிறரும், தாமே சிந்தித்து, தாம் கண்ட கொள்கைகளை மக்களிடம் கூறினர்—அதேபோல, தன் மனத்தில் தோன்றும் எதையும் தான் செய்யும் அருகதை பெற்றவராகக் கூறிக்கொள்கிறார், ஆச்சாரியார்.

மக்கள் மன்றத்தில் புதுமை கண்ட மார்க்கபோதகர்கள் அனைவரும், அன்பர் ஆச்சாரியாரைப் போல, அரசு பீடத்தில் அமர்ந்திருந்து அல்ல, தம் காரியங்களைச் சாதித்தது.

ஆனால், இவரோ, அரசபீடத்திலமர்ந்தபடி, தன் காரியங்களைச் சாதிக்கப்போவதாகத் தெரிவிக்கிறார்.

போதியரச்சப் புத்தரும், சிலுவைக்குப் பலியான இயேசுவும், மனித மார்க்கம் உய்ய வழி கண்டார்கள். அவர்களோடு, இந்துமார்க்கம் அழியாமற் காக்க முயன்ற ராமானுஜரையும் சங்கரரையும் சேர்த்துக்கொண்டு, அவர்களில் 'தன்னையும், ஒருவனாகக் கருதுமாறு, தெரிவிக்கிறார்.

"அவர்களைப்போல, நானும் என் மனதில் பட்டதைச் செய்ய நினைக்கிறேன். நான் செய்வது நல்லதறகே. கேள்வி கேட்காமல், என் இஷ்டப்படி, நடக்க விட்டுவிடுங்கள்"

துணிந்து கூறுகிறார், ஆச்சாரியார்! 'இவர் இஷ்டப்படி' நடக்க அல்ல, சட்டசபையிருப்பது, எம். எல். ஏ.க்கள் தேர்ந்தெடுக்கப்படுவது, மந்திரிசபை ஒன்று அமைக்கப்படுவது, ஜனநாயகமெனும் பெயர் சூட்டி நாம் அழைப்பது. ஆனாலும், கூறுகிறார்! அவர் கூறுவதையும், தேசிய நண்பர்கள் இன்னும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்!!

*

"புதுமார்க்கம் காணப்போகிறேன்!—தர்மராஜ்யம், நிறுவ விரும்புகிறேன்! — தடை கூறாதீர்கள்" என்று கூறும் அன்பர் ஆச்சாரியார் தெரிவிக்கும், தர்மராஜ்யம் எது? புதுமார்க்கம், எது?

"தர்மராஜ்யம்!—என்றால், மக்கள் யாவரும் சுகமாக வாழ்க்கை நடத்துவது. பேதா பேதமின்றி, இன்பமாக வாழ்வது"

—இப்படித்தான், பதில் கூறமுடியும், நம்மால். ஆனால், அன்பர் ஆச்சாரியார், ஸ்தாபிக்க விரும்பும் தர்மராஜ்யம் இதுவல்ல — அவர் நிறுவ விரும்புவது, சமதர்ம ராஜ்யமல்ல! வர்ணாசிரம தர்ம ராஜ்யம்!!

ஆம், தோழர்காள்! சாதிபேதம் சாய்கிறது— சமநிலை உருவாகிறது— ஆண்டானும் அடிமையும் ஒன்றே! —வேதியராயினும், வேறு குலத்தவராயினும் ஒன்றே—எது ஜாதி? எது மதம்? — எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓரினம், இவ்விதம் பள்ளுப பாடினீர்களே, நீங்கள் உயிரோடிருக்கும்போதுதான், பூசுரத் தலைவர் உரைக்கிறார், இதனை.

உரைப்பது மட்டுமா, ராமானுஜர், சங்கரர் போலிருந்தால், வாயளவில் கூறுவதோடு, பர்ணசாலையை நோக்கிவரும் சிஷ்ய கோடிகளிடம் உபன்யாசிக்குமளவில், நின்றுவிடுவார். அவர்களைப்போல அரசமரத்தடியிலிருக்கும் ஆரிய சிரேஷ்டரா, இவர்? அரியாசனமன்றோ, அளித்திருக்கிறோம்! ஆகவே, 'வர்ணாசிரம

(6-ம் பக்கம் பார்க்க)

தி. மு. க. கிளைக் கழகத் தோழர்காள்!

வாலிப வீரர்காள்! முற்போக்குக் கட்சிகாள்!

ஜூன் 21, கவனமிருக்கட்டும்!

ஆச்சாரியாரின் குலதர்மக் கல்வித் திட்டம் குறித்து, அரக்கோணத்தில் கூடிய தி. மு. க. போதக்குழு நிறைவேற்றியுள்ள தீர்மானம்:—

கிராமப்புறங்களில், ஆரம்பக் கல்வித் திட்டத்தை தொழில் திறமையை வளர்க்கும் நோக்கத்துடன் திருத்தி அமைப்பதாகச் சாக்குக் கூறிக்கொண்டு நாட்டின் தற்குறித்தனத்தை அதிகமாக்கவும், பார்ப்பனரல்லாத சிறுவர்களை அறிவுச் சூன்யர்களாக்கவும், ஜாதி ஆணவத்தை ஊட்டி சமுதாயத்தைக் கெடுக்கும் வர்ணாஸ்ரமத்தைப் புதுப்பிக்கவும், சிறுவர்களைக் கொடுமைக்காளாக்கும், கலைக்குதவாத, நடைமுறைக்கு ஏற்றதல்லாத திட்டத்தை—சென்னை சர்க்கார் புகுத்த முடிவு செய்திருக்கும் சூழ்ச்சியை, பொதுக்குழு வன்மையாகக் கண்டிப்பதுடன், அறிவாளர்களும், கல்வி நிபுணர்களும், பொது ஸ்தாபனங்களும் கண்டிக்கும் இந்தத் தீயத் திட்டத்தை உடனடியாகக் கைவிட வேண்டுமென்று தெரிவிப்பதுடன், சர்க்கார் இது விஷயமாகப் பிடிவாதம் செய்தால், மிகக் கடுமையான எதிர்ப்பு பொது மக்களிடமிருந்து கிளம்பும் என்று எச்சரிப்பதுடன், இந்தத் தீய கல்வித் திட்டத்தை ஒழிப்பதற்கான எத்தகைய கிளர்ச்சிக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தயாராக வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன், ஜூன் 21-ந்தேதியன்று புதிய ஆரம்பக் கல்வித் திட்டக் கண்டனப் போதுக் கூட்டங்கள் நடத்தி, பெற்றோர்களிடத்து எதிர்ப்புக் கையெழுத்துக்கள் வாங்கி சென்னை அரசியலார்க்கு அனுப்புவது என்று இப்பொதுக்குழு முடிவு செய்கிறது."

தோழர் நெடுஞ்செழியன் பிரேபிக்கத் தோழர்கள் ஈ. வி. கே. சம்பத், அ. பொன்னம்பலனார், ஆர். பழனிச்சாமி ஆகியோர் வழிமொழிய, இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நாடெங்கும் கண்டனக் குரல் எழும்பட்டும்!
கையெழுத்துக்கள், குவியட்டும்!

திராவிடநாடு

காஞ்சி] 7—6—53 [ஞாயிறு

'நம் நாடு'

★

'தினசரி இதழ் எப்பொழுது ஆரம்பிக்கப்போகிறீர்கள்?' என்று ஆர்வத்தோடு அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தீர்கள்.

தினசரி இதழ் நடத்துவதென்பது, எளிதான வேலையல்ல. அதுவும் நம்மைப்போன்றோர் ஆரம்பிப்பதென்பது மிக்க கடினம் காரணம், நாம் பணபலமற்றோர். அது மட்டுமல்ல, நாம் முற்போக்குக் கருத்துக்களை நாட்டிலே பரப்ப முற்பட்டிருப்போர். நமக்கு ஆதரவாளர்களைவிட எதிர்ப்பாளர்கள் அதிகம். எல்லாத் திக்குகளிலிருந்தும் எதிர்ப்பு. சமயவாதிகள், சாத்திரவாதிகள், பழமைபித்துக்காரர்கள், குருட்டு நம்பிக்கை கொண்டோர், புராணப் பிரசங்கிகள், ஆஸ்தீக ஆஷாடபூதிகள், ஆதீனகர்த்தாக்கள், ஆட்சிபீடத்திலமர்ந்திருக்கும் அதிகார அம்புகள் ஆகியோரை எதிர்த்து முன்னேறவேண்டியவர்கள். இப்படிப்பட்ட நிலையிலுள்ள நாம், தினசரி நடத்தவேண்டும். இது எளிதான காரியமா? அல்ல. ஆனாலும், நம்முடைய கொள்கைகள் நாட்டிலே பரவ வேண்டுமானால், ஒரு தினசரியாவது கட்டாயம் தேவையல்லவா!

இந்தத் தேவையைப் பூர்த்தி செய்யும் நிலைமை இப்பொழுது தான் நமக்கு ஏற்பட்டிருக்கிறது.

மாநில மாநாட்டில் எஞ்சியுள்ள தொகையைக்கொண்டே இதைத் துவங்கியுள்ளோம்.

ஜூன் 15-முதல் ஆரம்பமாகிறது தினசரி இதழ் — 'நம் நாடு' என்ற பெயருடன்.

ஆரம்பித்துவிட்டால், போதாது. அதை ஆதரிக்கும் ஆதரவாளர்களின் தொகை பெருகவேண்டும்.

உங்களின் அன்பும் ஆதரவும் பெருகினால்தான், தினசரி மேன்மேலும் பெருகி, தன் கொள்கைகளை நாட்டில் பரப்பமுடியும்.

இதனை, நம் தி. மு. க. தோழர்கள் அனைவரும் கருத்திலிருத்தி, ஆதரவை அதிகமான அளவில் தர வேண்டும்.

'நம் நாடு'—உங்கள் ஏடு.

'நம் நாடு' — உங்கள் எழுச்சி முரசு.

'நம் நாடு' — உங்கள் எண்ணத்தின் எதிரொலி.

'நம் நாடு' — உங்கள் செல்வக் குழந்தை.

அதை வளர்க்கும் பொறுப்பு உங்களுடையது.

உங்களுடைய பேராதரவையும் அன்பையும் துணைக்கொண்டு 'நம் நாடு' உங்களை நாடி வருகிறது — ஜூன் 15-ல்.

கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் சந்தாதாரராகச் சேருங்கள்.

ஒவ்வொரு ஊரிலும் விற்பனையாளர்களை ஏற்படுத்துங்கள்.

உங்கள் கருத்தை—உங்கள் பணியினை—உங்கள் முரசை— நம் நாட்டின் மூலம் பரப்ப என்றும் உறுதுணை புரியுங்கள்.

'நம் நாடு'—நம் ஒவ்வொருவரின் சொந்த ஏடு. அதைச் சீரும் சிறப்புமுற வளரும் வகையில் ஆதரவு தாருங்கள் என்ற அன்புக்குரலோடு—'நம் நாடு'—ஜூன் 15-ல் உங்களை நாடி வருகிறது. தருக ஆதரவு.

✲

சிதம்பரத்தில் தென்னாற்காடு மாவட்ட இரண்டாவது தி. மு. க. சமூக சீர்திருத்த மாநாடுகள்

தென்னாற்காடு மாவட்ட இரண்டாவது தி. மு. க. சமூக சீர்திருத்த மாநாடுகள் சிதம்பரத்தில் ஜூலை 4, 5. சனி, ஞாயிறு நாட்களில் கைவல்யனார் பந்தலில், மஜீத் அரங்கத்தில் நடைபெறும்.

முதல்நாள் தோழர் க. அன்பழகன், தலைமை வகிப்பார். தோழர் சி. வி எம். அண்ணாமலை திறந்து வைப்பார்.

இரண்டாம்நாள் தோழர் சி. பி. சிற்றரசு தலைமை வகிப்பார். தோழர் இராம. அரங்கண்ணல் திறந்துவைப்பார்.

ஓவியக் கண்காட்சியைத் தோழர் எம். ஜி. ராமச்சந்திரன் திறந்து வைப்பார்.

இரண்டு நாட்களிலும் பொதுச் செயலாளர் அண்ணாதுரை இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், மு. கருணாநிதி ஏ. வி. பி. ஆசைத்தம்பி. என். எஸ். இளங்கோ, தில்லை-வில்லாளன், என். வி. நடராசன், மூதாட்டி இராமாமிர்தம் மையார். சத்தியவாணி முத்து, அருண்மொழி. பூங்கோதை மற்றும் பலர் பேசுவர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன், நடிப்புப்புலவர் கே. ஆர் ராமசாமி, சிவாஜி கணேசன், எஸ். எஸ். ராஜேந்திரன. டி. வி. நாராயணசாமி ஆகியோர் கலைச் சொற்பொழிவு நிகழ்த்துவர்.

சிதம்பரம் ஜெயராமன், நாகூர் அனீபா, கே. ஆர். செல்லமுத்து இன்னிசை வழங்குவர்.

இரண்டு நாட்களிலும் காதல் ஜோதி' 'சந்திரோதயம்' நாடகங்கள் உண்டு.

வரவேற்புக் குழுவினர் ரூ 5, பிரதிநிதிரூ 3, பார்வையாளா (இரண்டு நாட்களுக்கும்) ரூ 1. பெண்கள் (இரண்டு நாட்களுக்கும்) அணா 8. மாநாட்டு வேலைகள் வெகு துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாநாடு வெற்றிகரமாக நடைபெற எல்லா ஏற்பாடுகளும் மாநாட்டுக்கு வரவேற்புக் குழுவினரால் வேகவேகமாகச் செய்யப்பட்டு வருகின்றன.

★

5-ம் பக்கத் தொடர்ச்சி

அல்ல. தப்பித்தவறி ஓரிரு பார்ப்பனக் குடும்பங்கள் இருந்தாலும் அவர்களுடைய குழந்தைகள் எல்லாம் நகரங்களுக்கு அனுப்பப்பட்டு அங்குதான் கல்வி கற்பிக்கப்படுகிறது. ஆகவே இந்தத் திட்டத்தினால், பாதிக்கப்படுபவர்கள் நம்மவர்களே என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டுகிறோம். சிறுவர்களின் கண்களைக் குத்துவது மட்டுமல்ல, இத்திட்டம்; அவர்களின் கைகால்களையும் வெட்டுவது போலாகும் என்பது எவருக்கும் எளிதில் புரியக்கூடியதாகும்.

ஆகவே, தோழர்காள்! எதிர்காலம் குறித்துக் கவலைப்படும் வாலிபர்காள்! நீங்கள், எந்தக் கட்சியிலிருந்தாலும், இந்த நேரத்தில், 'ஏனோதானோ' வென்று இருந்து விடாதீர்கள்! 'சூதரின்' கைப்பிடியில் சிக்கியிருக்கிறோம்—அந்தச் சூதுக் கோட்டையைப் பொடிப் பொடியாக்கும் வரை, 'சாணக்கியர் பரம்பரை'யின் சாகசமா? தவறு! தவறு!! இப்போது, அவர்கள் சாகசக் கட்டத்தைத் தாண்டி, சட்ட மூலம், நம்மைக் கொட்டும், கட்டத்துக்கு வந்திருக்கிறார்கள்.

இந்தச் சதியை முறியடிக்க, தாழ்ந்த நம்மினத்தின் வளர்ச்சியில் வீசப்படும் இடியினைத் தவிர்க்க, தயாராகுங்கள்!!

ஜூன் 21—உங்களின் தீரத்துக்காக, காத்திருக்கிறது.

ஜூன் 21 — நமது வாழ்வுப் போராட்டநாள்.

ஜூன் 21 — வஞ்சகத்தை முறியடிக்கும்நாள்.

வருகிறது! வருகிறது!! ஆபத்து' ஆரம்பக் கல்வித் திட்டம் என்னும் புது ஆபத்து! வாழ்ந்து கெட்ட மரபினர்காள், தயாராகுங்கள்!!!

★

சுத்தப் பொய்!

"ஒரு 'பெரும் பொய்யை' லண்டன் டைம்ஸ் என்ற பத்திரிகை வெளியிட்டிருக்கிறது. கால மாறுதல் தான் இப்படிப்பட்ட பொய்களை எல்லாம் மக்கள் நம்பும்படி செய்கிறது போலும்! எவ்வளவு துணிச்சலாக இந்தப் பொய்யை அந்தப் பத்திரிகை வெளியிட்டிருக்கிறது பாருங்கள்!" என்று எனது நண்பர்களுக்கெல்லாம் சொல்லலாம் என்று கருதிக்கொண்டு கடைவீதி வழியாகச் செல்லும்பொழுது. ஒரு கடையில் பல பத்திரிகைகள் தொங்கவிடப்பட்டிருந்தன. கொட்டை எழுத்துக்களில் 'அந்தப் பொய்' போடப்பட்டிருந்தது. ஆச்சரியத்தால் உந்தப்பட்ட நான் ஒரு பத்திரிகையை வாங்கிப் பார்த்தேன்—உண்மையாகச் சொல்கிறேன், என்னால் நம்பவே முடியவில்லை! லண்டனிலுள்ள ஒரு பத்திரிகை வடிகட்டிய ஒரு பொய்யை வாய்மை என்று எண்ணிக்கொண்டு பிரசுரித்து விட்டதே என்று எள்ளி நகையாடிக் கொண்டிருக்கும் சமயத்தில், நமது நாட்டுப் பத்திரிகை, அதிலும், நான் கூறும் அந்தப் பொய்யை ஆதாரங்களோடு நிலைநாட்டக்கூடிய பத்திரிகை அந்தப்பொய்யை உண்மைதான் என்று வெளியிட்டிருக்கிறதென்றால், யார்தான் ஆச்சரியப்படமாட்டார்கள்!

யாரோ ஒரு வெள்ளைக்காரனும் ஈ. பி. கில்லரியாம் அவன் பெயர், இன்னொரு நேபாளியாம், செர்பா டென்சிங்காம் அவன் பெயர்—இருவருமாக இமயமலையிலுள்ள எவரஸ்ட் என்ற சிகரத்தை எட்டிப் பிடித்துவிட்டார்களாம்! 29002-அடி என்று கணக்குக்கூடக் கூறிவிட்டார்கள். ஏன் இந்தக் கணக்கைக் கூறினார்கள் தெரியுமா? எவரஸ்டின் உச்சியை அடைந்துவிட்டோம் என்று சும்மா சொன்னால் யாரும் நம்பமாட்டார்கள் என்று கருதியே இந்த அடிக்கணக்கைக் கொடுத்திருக்கிறார்கள்! ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்யா? யார் நம்புவார்கள் இதை எல்லாம்!

எவரஸ்ட் என்றால் ஏதோ ஒரு சாதாரண மலை என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் போலும்!

இமயமலைக்கு அப்பால் வேறு உலகமே இல்லை என்பதைத் தங்கள் 'ஞானதிருஷ்டி' மூலம் கண்டு பிடித்து நமக்குத் திருவாய்மலர்ந்தருளியதுமன்றி, உலக குருவாம் சங்கராச்சாரிய சுவாமிகளையும் உண்டாக்கிய மாபெரும் மகான்களாம் நமது முன்னோர்கள், இமயமலையைப் பற்றிச் சொல்லியும் எழுதியும் வைத்திருக்கும் "உண்மைகளை" உணர முடியாத சிலர், எவரஸ்டின் உச்சியைப் பார்த்துவிட்டதாகக் கூறுபவரை நம்பி, அதனைப் பத்திரிகைகளிலும் வெளியிடுகிறார்களே! என்ன பேதமை இவர்களுக்கு!!

நமது முழுமுதற் பெருங் கடவுளாம் பரமசிவன் அவர்களின் மாளிகையாம் கயிலாயத்தை யாரோ கையாலாகா சிலர் கண்டுவிட்டதாகச் சொன்னால், யார் வேண்டுமானாலும் நம்பட்டும்—ஆனால் நான் மட்டும் நம்பமாட்டேன். பரமசிவன் அவர்களின் உறைவிடமாம் கயிலாயத்தைப் பற்றி இவர்களுக்கெல்லாம் என்ன தெரியும்?

பழைய வேதங்களை உணர்ந்த மறையவர்கள் தொழவும், மான் மழு ஏந்திய கரத்தினராய், மாதரசியாம் பார்வதி தேவியார் பக்கம் அமரவுமான கோலத்தோடு, இமய மலையின் உச்சியில் அதாவது எவரஸ்ட் மலையின் நுனியில் அதியற்புத வேலைப்பாடுகளுடன் கட்டப்பட்ட தங்க (Gold) மாளிகையில் முழுமுதற் பெருங்கடவுளாம் பரமசிவன் தமது அடியவர் குழாங்கட்கெலாம் அருள் வழங்கிய வண்ணம் வீற்றிருக்கிறார் என்பது நமது வேத—புராண— இதிகாசங்கள் அனைத்திலும் முடிந்த முடிவாகும்!! இந்தப் 'பேருண்மையை'ப் பொய்யாக்கப் பார்க்கிறார்கள் மிஸ்டர் கில்லரும் அவரது தோழர் டென்சிங்கும்!

வாதத்துக்கு வேண்டுமானால் எவரஸ்ட் உச்சியை கண்டுபிடித்து விட்டதாகக் கூறப்படும் செய்தியை உண்மைதான் என்று வைத்துக் கொள்வோம்! ஆனால், எவரஸ்டின் உச்சியைக் கண்டவர்கள் அங்கு பல கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டிருக்கும் தங்க மண்டபத்தையும், அதன்கண் எழுந்தருளியிருக்கும் பார்வதி—பரமேசுவர குடும்பத்தையும் கண்டிருக்கவேண்டுமே! கண்டிருந்தால் அந்தச் செய்தியை, லண்டன் டைம்ஸ் வெளியிடாவிட்டாலும், 'நமது' பத்திரிகைகள் கட்டாயம் வெளியிட்டிருக்குமே! ஏன் வெளியிடவில்லை? அவர்கள் எவரஸ்டின் உச்சியைக் கண்டது உண்மையென்றால், அங்குள்ள காட்சிகளையும் கண்டிருக்க வேண்டுமே! அங்ஙனம் காணாததால் அவர்கள் எவரஸ்டின் உச்சியை அடையவில்லை என்று நான் ஒரு உண்மையான கடவுள் பக்தன் என்ற முறையில் கூறுகிறேன். ஒருவேளை அவர்கள் எவரஸ்டின் உச்சியை அடைந்து அங்குள்ள காட்சிகளையும் கண்டிருப்பார்கள் என்று வைத்துக் கொண்டாலும் "கண்டவர் விண்டதில்லை — விண்டவர் கண்டதில்லை" என்று வேதவாக்குப் பொய்யாகி விடும். இதை ஏன் இன்னும் வளர்த்துக் கொண்டுபோக வேண்டும்! எவரஸ்ட் உச்சியைக் கண்டு பிடித்ததைப் பொய் என்று கூறும் என்னை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள்! வேதபுராண இதிகாசங்களை நம்பும் என்னால் இச்சம்பவத்தை நம்பமுடியவில்லை. நான் இதை நம்பவேண்டுமென்று விரும்புகிறவர்கள், வேதபுராணங்களில் கூறப்பட்டிருப்பவை எல்லாம் பொய்—அவர்களை நம்பாதே என்று கூற முன் வரட்டும். நானும் மற்றவர்களைப் போல் எவரஸ்டின் உச்சியை அடைந்த சம்பவத்தை நம்புகிறேன்—நிச்சயமாக நம்புகிறேன். வேதபுராணங்கள் பொய்யா? எவரஸ்டின் உச்சியை அடைந்தது பொய்யா? எது பொய்? கூறுங்கள் பார்ப்போம்!" என்று வேத-புராண—இதிகாசங்களைக் கரைத்துக் குடித்த கடவுள் பக்தர் ஒருவர் கூறுகிறார்.

எவரஸ்டின் உச்சியை அடைய எத்தனையோ பேர் முயற்சி செய்தும், பலர் உயிரிழந்தும், பல இன்னல்களுக்கு ஆளானபிறகு இப்போது அதன் உச்சியை அடைந்த செய்தி கேட்டதும் உலகம் முழுவதுமே, அவர்களைப் பாராட்டவும் அவர்களுக்கு ஆயுள்வரை உதவித்தொகை அளிக்கவும் முன்வந்திருக்கும்நேரத்தில்தான், மேற்கண்டவாறு ஒரு பக்தர் கூறிப் பரவசப்படுகிறார். பரமசிவப்பெருந்தகையே! இதுவும் உன் திருவிளையாடல்களில் ஒன்று போலும்!

★

அரசாங்கப் பொருளாதாரம்

[ஏ. இருதயராஜ், திருச்சி செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்]

மரண வரிகள்

ஒருவருடைய மரணத்திற்குப் பிறகு அவருடைய சொத்து மற்றொருவர் கைக்கு மாறும்பொழுது விதிக்கப்படுவது மரணவரி. பிரிட்டன் அமெரிக்கா போன்ற நாடுகளில் இது விதிக்கப்படுகின்றது.

இந்த வரி பலவிதமாக விதிக்கப்படலாம். ஒருவர் இறந்தபிறகு அவருடைய சொத்தின்பேரில் அதன் மதிப்புக்குத்தக்கவாறு உயரும்விகிதாசார முறையில் விதிப்பது ஒரு முறை. ஒருவர் இறக்கும்போது விட்டுச்செல்லும் சொத்தை அடைபவருக்கும் இறந்தவருக்கும் உள்ள சொந்தப்பொறுத்து நெருங்கின உறவினரானால் குறைந்த வரியும் தூரபந்துவானால் அதிக வரியும் விதிப்பது மற்றொருமுறை.

இம்மாதிரி வரிகள் விதிக்கப்படுவது நியாயந்தான். தன் சொந்த முயற்சியில்லாமல் வேறோர் சம்பாதித்த சொத்தை ஒருவன் ஒரு குடும்பத்தில் பிறந்த ஒரே காரணத்துக்காக அடையும்போது அதில் ஒருபங்கு அரசாங்கத்துக்குகொடுப்பதில் தவறில்லை. ஒருவர் சம்பாதிப்பதை அவர் ஆயுள்காலம்வரை அனுபவித்த பிறகு அவர் விட்டுச் சென்ற மிஞ்சிய சொத்தின்பேரில்தான் இந்த வரி விதிக்கப்படுவதால் வருமான வரியைப்போல் உழைக்கும் சக்தியையோ அல்லது உழைக்கும் விருப்பத்தையோ இது கெடுத்துவிடாது.

ஒருவர் இறந்தபிறகுஅவருடைய சொத்து அவர் விரும்பிய ஒரு குறிப்பிட்ட ஆளுக்கு போய்ச் சேர வேண்டுமானால்—சேதமின்றிச் சேர வேண்டுமானால்—அதற்கு அரசாங்கத்தின் அமைப்பும் அதன் ஆதரவும் பாதுகாப்பும் அவசியம். அதனால் ஒருவர் பயமின்றிச் சொத்து சேர்த்து, அதைத் தான் விரும்பியவர்கள் தனக்குப்பின் அடைவார்கள் என்ற நம்பிக்கையோடு இறக்கும்போது, அவருடைய சொத்தில் ஒரு பகுதி அரசாங்கத்துக்கு போய்ச் சேருவதில் தவறில்லை.

இந்த வரியை வசூலிப்பதில் சிரமமுமில்லை. அதிக பொருள் செலவும் அரசாங்கத்துக்கு ஏற்படுவதில்லை. இந்த வரி அமுலிலிருக்கும் நாடுகளிலெல்லாம் அரசாங்கத்துக்கு நல்ல வருமானம் கிடைக்கிறது.

தன் வாரிசுக்கு விட்டுப்போகும் சொத்தில் ஒரு பங்கு வரியாக அரசாங்கத்தால் எடுத்துக்கொள்ளப்பட்டுவிடும் என்று முன்கூட்டியே தெரியுமாதலால் அந்த, நஷ்டத்தை ஈடு செய்வதற்காக, தன் வாரிசுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு குறையாமல் போய்ச் சேரவேண்டுமென்று விரும்பினால், இன்னும் அதிக சொத்து சேர்க்கவே தோன்றும். அதனால் வருமான வரியைப்போல் சேமிக்கும் சக்தியும், சேமிக்கும் விருப்பமும் குறைவதில்லை.

ஆனால் ஒரு அளவுக்குமீறி இந்த வரி விதிக்கப்பட்டால் பெருங்கெடுதல் விளையும். சொத்தில் பெரும் பகுதி தனக்குப்பின் வரியாக எடுத்துக்கொள்ளப்படும் என்று கருதித் தன் வாழ்நாளிலேயே சம்பாதித்ததையெல்லாம் செலவழித்து அனுபவித்துத் தீர்த்துவிடலாம் என்று சிலருக்குத் தோன்றலாம். இவ்விதம் வரிக்குப் பயந்து பலரும் இப்படியே செய்தால் சேமிப்புக் குறையும். அதனால் நாளடைவில் தொழில் வளர்ச்சியும் குறையும்.

ஆனால் என்னதான் வரி இருந்தாலும் தகப்பனுக்குப் பிள்ளைமேல் பாசம் இருப்பதால் சொத்துச் சேர்த்துவைக்கும் எண்ணம் போய்விடாது. ஆதலால் நியாயமான வரி விதிக்கப்படுவதால் சேமிப்புக் குறைந்துவிடாது.

சொத்தின் மதிப்புக்குத் தக்கவாறு வரிவிதிப்பதைத்தவிர, இறந்தவருக்கும் வாரிசுக்கும் உள்ள உறவைப்பொறுத்து வரி விதிப்பதே சிறந்தது. அதாவது ஒருவருடைய சொத்து அவரது பிள்ளைகளுடைய கைக்கு மாறும்போது சாதாரண குறைந்த வரியும், அதே சொத்து பேரபிள்ளைகளுக்கு மாறும்போது சற்று அதிக வரியும், இப்படியே ஒவ்வொரு புதியதலைமுறைக்கும் போய்ச் சேரும்போது வரியை சிறிது சிறிதாக அதிகரித்து, பத்து அல்லது பதினைந்து தலைமுறைகள் ஆனதும் சொத்து முழுவதும் அரசாங்கத்துக்குச்சேரும்படிசெய்வது. இந்த முறைப்படி வரி விதித்தால் சேமிப்புக்குறையவழியில்லை. தனது தூரபந்துகளுக்குச் சொத்து முழுவதும் போய்ச் சேருகிறது என்பது பற்றி யாருக்கும் கவலையில்லை. பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் இவர்களுக்கு சொத்து அதிக சேதமின்றி போய்ச் சேர்ந்தால்போதும் என்று தான் எல்லோரும் நினைப்பார்கள்.

இந்தியாவில் அரசியல் சட்டப்படி நிலம் போன்ற சொத்துக்களின் பேரில் மரண வரி விதிப்பதற்கு ராஜ்ய அரசாங்கங்களுக்கும் நிலமல்லாத மற்ற சொத்துக்களின் பேரில் வரி விதிக்க மத்திய அரசாங்கத்துக்கும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால்இந்துசட்டங்களைத் திருத்தும்வரை மரணவரி விதிக்க முடியாது. கிருஸ்துவர்களின் சட்டப்பிரகாரம் தகப்பன் இறந்தபின்தான் மகனுக்குச் சொத்துச் சேருகிறது. இந்து சட்டப்படி மகன் பிறந்த உடனேயே அவனுக்குத் தகப்பனுடைய சொத்தில் பங்கு ஏற்படுகிறது. மேலும் பாகம் பிரிக்கப்படாத இந்துக் குடும்பங்களின் பேரில் இந்த வரி விதிக்கப்படுவதனால் பல சிக்கல்கள் ஏற்படும்.

மேலும் இந்தியாவில் பிள்ளையில்லாதவர்கள் வேறாரைப் பிள்ளை எடுத்து வளர்ப்பது சகஜம். அதனாலும் வரி விதிப்பதில் இடையூறுகள் வந்து சேரும்.

இந்தியாவில் பெரும்பாலோர் ஏழைகள். அதனால் வரி விதித்த போதிலும் பெரும்பாலோருடைய சொத்துக்கள் வரி விதிப்புக்குரிய மதிப்புக்குக் கீழேதான் இருக்கும். அதனால் இந்த வரியினால் அதிக வருமானம் கூட எதிர்பார்க்க முடியாது என்றும் சொல்லப்படுகிறது.

பிரிட்டனில் மொத்த வரி வருமானத்தில் பத்திலொரு பங்குக்கு மேல் மரண வரியிலிருந்து கிடைக்கிறது. 100 பவுன் பெறுமான சொத்துக்களின் மேல் வரி கிடையாது. அதற்குமேல் 100-க்கு 1 சதவிகிதம் முதல் உயரும் விகிதாசார முறையில் வரி விதிக்கப்படுகிறது. 2,000,000 பவுனுக்கு மேல் மதிப்புள்ள சொத்துக்களின் மேல் நூற்றுக்கு 50 சத விகிதம் போல் வரி விதிக்கப்படுகிறது.

பிரான்ஸ் தேசத்தில் இறந்தவர் விட்டுச் செல்லும் முழுச் சொத்தினுடைய மதிப்பைப்பார்த்து வரி விதிப்பதில்லை. முறைப்படிசொத்து யார் யாருக்கு சேர வேண்டுமோ அவரவர்களுக்குச் சேர்ந்த பிறகு ஒவ்வொருவருக்கும் சேர்ந்த தனிச் சொத்தின் மதிப்பின்மேல் வரி விதிக்கப்படுகிறது. இதனால் வரிப்பளுவும் அதிகம் இருப்பதில்லை.

சாமான்களின் மேல் விதிக்கப்படும் வரிகள்

1. விற்பனை வரி

பிரிட்டன் தவிர அநேகமாக மற்ற நாடுகளிலெல்லாம் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. விற்பனை வரியால் வியாபாரமும் தொழில் வளர்ச்சியும் கெடும் என்ற எண்ணத்தாலும், மறைமுகமான வரிகளையே ஆங்கிலேயர் வெறுப்பதாலும் பிரிட்டனில் இந்த வரி விதிக்கப்படுவதில்லை.

1935-ம் வருஷம் நமது நாட்டில் ஏற்பட்ட அரசியல் சட்டத்தின்படி மாகாணங்களுக்கு விற்பனை வரி விதிக்கும் உரிமை வழங்கப்பட்டது. அதற்குப்பின் பதவிக்கு வந்த காங்கிரஸ் கட்சியானது பல மாகாணங்களில் மதுவிலக்கை அமுலுக்கு கொண்டு வரும்போது அங்கெல்லாம் அரசாங்கத்துக்கு கிடைத்து வந்த கலால் வரி வருமானம் குறைந்த காரணத்தால் வருமானம் தரக்கூடிய புது வரிகளை விதிக்க வேண்டியதாயிற்று. இப்பொழுது ராஜ்ய அரசாங்கங்களுக்கு கிடைக்கும் வருமானங்களுக்குள் விற்பனை வரி வருமானம்தான் அதிகம்.

சென்னை மாகாணத்தில் 1939-க்குப் பிறகு மதுவிலக்குக் கொள்கை விட்டு விடப் பட்டாலும், விற்பனை வரி வைத்துக் கொள்ளப்பட்டது. 1948-ம் வருஷம் திரும்பவும் முன்னை விட தீவிரமாக மதுவிலக்கு அமுல் செய்யப்பட்டபொழுது விற்பனை வரி அதிகரிக்கப்பட்டது.

விற்பனைவரியால் 1949-50 ல் இந்திய யூனியனில் உள்ள ராஜ்யங்களுக்கு கிடைத்த மொத்த வருமானம் ஏறக்குறைய 38 கோடியாகும். சென்னையில் மட்டும் விற்பனை வரியால் தற்பொழுது 16 அல்லது 17 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கிறது. அதனால் தான் சென்னை அரசாங்கத்தில் ஒரு நிதிஅமைச்சர் விற்பனை வரியை சென்னைக்குக் கிடைத்த ஒரு காமதேனு என்று குறிப்பிட்டார்.

விற்பனை வரியை வியாபாரி முதலில் அரசாங்கத்துக்கு செலுத்திவிட்டாலும் கடைசியில் அதன் சுமை சாமான்கள் வாங்குபவர்களின்மேல்தான் மாற்றப்படுகிறது, அதனால் ஒருவர் பாக்கியில்லாமல் எல்லோரும் இந்தவரியைச்செலுத்த

21-6-53 கண்டன நாள்

நாடெங்கும் நடத்துங்கள்

சென்னை முதலமைச்சர், தம்முடைய சொந்த முறையில் கொண்டுவரஇருக்கும் புதிய ஆரம்பக்கல்வித் திட்டமானது ஜனநாயகத்துக்குப் புறம்பானதும், நடைமுறைக்கு ஒவ்வாததும், சிறுவர்களின் வாழ்க்கையையே பாதிக்கக்கூடியதுமாக இருக்கிறது. இந்த திட்டத்தை தி. மு. க. நாடெங்கும் விளக்கிக் கண்டிக்கவேண்டும்.

இந்தப்புதிய ஆரம்பக்கல்வித்திட்டத்தைக் கண்டிக்க 21-6-53 அன்று நாடெங்கும் உள்ள தி. மு. க. கிளைக் கழகங்கள் கண்டன நாள் கூட்டங்கள் நடத்தி தங்கள் தீர்ப்பை ஆச்சாரியார் ஆட்சி அறியச் செய்ய வேண்டுகிறோம்.

P.T.C.

ARTS AND SCIENCE

Success guaranteed to every student in S. S. L. C., Matric, Inter, B A., B Sc. Hons and B. Com.

Inter	2062 out of 2784 have passed in our college in the last 9 years.
B.A., B.Sc	398 out of 540 have passed.
B. Com.	In the past 4 years 36 out of 47 have passed.
S. S. L. C. Matric	We have helped 2168 out of 2809 to pass in the last 6 years.

We have a matchless staff.

ENGINEERING

We will train you to become an Engineer or a Technician in mere 9 months and make you earn more than Rs. 200 a month by taking you for one of the following courses-

Electrical   Civil   Wireless Telegraphy
Mechanical   Radio

We have colleges at Trichy, Madras and Madura. Hostel and Laboratory attached.

Enquiry Office:

TRICHY: 29. Nandi koil St., Teppakulam.

MADRAS: 14, Tasuddin khan Bahadur St., Triplicane high Rd

MADURA: 82-B, Town hall Road Opp. to Victoria Edward public hall.

P. V. PARTHASARATHI, Principal.

எமது புதிய வெளியீடுகள்!

படித்து மகிழ்வீர்
அறிவு விருந்துகளை!!

கலைஞர் மு. கருணாநிதி
பரப்பிரம்மம் விலை ரூ. 1.
நாடும் நாடகமும்... ,,
அரங்கண்ணல்
உடைந்த ஆசை... ,,
தில்லை-வில்லாளன்
கிளிக்கூண்டு... ,,

திராவிடப்பண்ணை,
தெப்பக்குளம், திருச்சி.

இராமநாதபுர மாவட்ட இரண்டாவது தி.மு.க. மாநாடு

விருதுநகரில்

ஜுன் 27, 28 தேதிகளில்

நடைபெறும்.

கிறோம். அதனால்தான் அது இவ்வளவு அதிக வருமானத்தையும் தருகிறது.

இந்தவரி சிறிதுசிறிதாகச்சாமான்கள் வாங்கும்போது வசூலிக்கப்படுவதால் மக்களுக்கு கஷ்டமாகவே தோன்றுவதில்லை.

ஒரு நாட்டில் பணக்காரர்கள்மட்டுமே வரி செலுத்திக்கொண்டும் ஏழைகள் வரியே செலுத்தாமலும் இருந்தால் ஏழைகளுக்கு நாட்டு நடப்பிலேயே அக்கரை இருக்காது. அதனால் ஏழைகளும் ஒரு சிறிதாவது அரசாங்கத்துக்கு பொருளுதவி செய்யவேண்டும். அப்பொழுதுதான் நாட்டில் அதிகத் தொகையினராகிய ஏழைகள் அரசாங்க வரவு செலவு விவகாரங்களை அக்கரையோடு கவனிப்பார்கள். இம்மாதிரி அக்கரையோடு மக்களெல்லோரும் அரசாங்கத்தின் அலுவல்களைப்பற்றி கண்ணுங் கருத்துமாய் இருந்தால் தான் மக்களாட்சி உண்மையில் சாத்தியமாகும்.

ஏழைகளும் அரசாங்கத்துக்கு தம்மாலியன்ற உதவி செய்யவேண்டியது அவசியமென்றாலும் உணவுப் பொருள்களின்மேல் வரிகள் விதிக்கப்பட்டால் ஏழைகளுக்கு அதிக சிரமம் உண்டாகும்.

விற்பனை வரி மக்களுடைய வரி கொடுக்கும் சக்தியைப் பார்த்து வசூலிக்கப்படுவதில்லையாதலால், அது நியாயமானதாகாது. ஆனால் பணக்காரர்கள் உபயோகிக்கும் போகப் பொருள்களாகப் பார்த்து அவைகளின் விற்பனையின் மேல் மட்டும் வரி விதித்தால் நியாயமாயிருக்கும். காரணம், வரி கொடுக்கும் சக்தியுள்ளவர்கள் மட்டும் வரி செலுத்துவார்கள் மற்றவர்களுக்குச் சிரமமிராது.

வருமானவரி போன்ற வரிகள் உயரும் விகிதாசார முறையில் மக்கள் வரி கொடுக்கும் சக்தியை அளவிட்டு விதிக்கப்படுவது போல் விற்பனை வரியை விதிப்பது சாத்தியமில்லை. அதனால் ஏழைகள் அதிகம் உபயோகிக்கும்பொருள்களின்மேல் வரி விதிக்காமல் விட்டு விட வேண்டும்.

சென்னையில் இப்பொழுது விதிக்கப்படும் விற்பனை வரி ரூபாய்க்கு காலணாவாகப் பார்ப்பதற்குக் குறைவாக இருந்தாலும் நடை முறையில் சாமான்களை வாங்குபவர்கள் அதற்கு அதிகமாகவே செலுத்துகிறார்கள்.

ஒரு சாமான் தயார் செய்வதற்குத் தேவையான கச்சாப்பொருள் ஒவ்வொன்றும் வாங்கும்போதும் விற்பனைவரி செலுத்தப்படுகிறது. பிறகு சாமான் தயாரானவுடன் அது தொழிற்சாலையிலிருந்து மொத்த வியாபாரிக்கு விற்கப்படும் போதும் விற்பனைவரி செலுத்தப்படுகிறது. சில்லரை வியாபாரி அந்த மொத்த வியாபாரியிடமிருந்து வாங்கும்போது ஒரு விற்பனை வரி செலுத்துகிறார். இதுவரை செலுத்தப்பட்ட எல்லா விற்பனை வரிகளும் சேர்ந்து விலையில்கூடி, ஜனங்களுக்கு விற்கப்படுகிறது. அந்நேரத்தில் வாங்குபவர்கள் மற்றுமொரு விற்பனை வரி செலுத்துகிறார்கள்.

ஒரு சாமானை நாம் கடையில் வாங்கும்போது நமக்குத் தெரிந்து ஒரு தரம்தான் நாம் விற்பனை வரி செலுத்துகிறோமே தவிர, அந்த சாமான்மேல் பல சமயங்களில்விதிக்கப்பட்டு பலரால், செலுத்தப்பட்டு எல்லாம் சேர்ந்து விலை உயர்ந்து அதனால் நாம் அதிக விலைகொடுத்து அந்தச் சாமானை வாங்குகிறோமென்பதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை.

நிறைய வருமானம் தருகிறது என்ற காரணத்தால் இந்த வரியைக் காமதேனு என்று கொண்டாடும் ராஜ்ய அரசாங்கங்கள் அதன் விளைவை எண்ணிடபார்த்துப் பாமர மக்கள் உபயோகிக்கும் பொருள்களை விற்பனை வரியினின்றும் விலக்கவேண்டும்.

2. உற்பத்தி வரி

சாமான்களின்மேல்விதிக்கப்படும் விற்பனை வரியைத் தவிர அவைகளின் உற்பத்தியின் மேலும் வரி விதிக்கப்படுகிறது. எல்லா நாடுகளிலும் இம்மாதிரி வரி விதிக்கப்பட்டு நல்ல வருமானம் கிடைக்கிறது. இவ்வரிகள் எல்லோரும் உபயோகிக்கும் சாதாரணப் பண்டங்களின் மேலும், உடம்புக்கு கெடுதி தரக்கூடியதும் அதனால் மக்கள் அவைகளை உபயோகிப்பதை குறைத்துக் கொள்ளவேண்டும் என அரசாங்கம் கருதும் பண்டங்களின்மீதும் விதிக்கப்படுகின்றன.

எல்லோரும் சாதாரணமாக உபயோகிக்கும் உப்பு, நெருப்புப் பெட்டி போன்ற பண்டங்களின் மீது வரிகள் விதிக்கப்படுகின்றன. இவைகள் எல்லோருக்கும் தேவைப்படும் பொருள்கள். இவைகளுக்காக ஒருவரும் அதிக பணம் செலவிடுவதில்லை. மேலும் வரி விதிப்பதால் அவைகளின் விலை ஏறினாலும் அவைகளை வாங்குபவர்கள் வாங்காமல் விட்டு விடுவதில்லை. இவைகள் சொற்ப விலையுள்ள பண்டங்களானதால், அதிக வரி விதிக்கவும் முடியாது. அதிக வருமானத்தை எதிர்பார்க்கவும் முடியாது.

ஏழைகளும் அரசாங்கத்துக்கு தங்களாலியன்ற அளவு உதவி செய்கிறார்கள் என்பதைத் தவிர இந்த வரிகளைப்பற்றி வேறொன்றும் சாதகமாகச் சொல்ல முடியாது. உப்பு நெருப்புப் பெட்டி போன்ற பண்டங்களை ஏழைகளும் பணக்காரர்களும் ஒரே அளவாகவே உபயோகிக்கிறார்களாதலால் ஏழைகள் செலுத்தும் அதே வரியைத்தான் பணக்காரர்கள் செலுத்துகிறார்கள். ஏழைகளுக்கு ஏற்படும் சிரமத்துக்குத்தகுந்தாற்போல் பணக்காரர்களுக்கு சிரமம் ஏற்படுவதில்லை இது நியாயமான வரிவிதிப்புக்கு விரோதமானது

மேற்சொன்ன வரிகளைவிட புகையிலையின் மேல் விதிக்கப்படும் வரி மிகவும் விரும்பத் தக்கது. இது புகையிலை உபயோகிப்பவர்கள்மேல் மட்டுந்தான் விழுகிறது. உப்பு, நெருப்புப் பெட்டி போன்று இது இன்றியமையாத தேவையல்ல.

ஆனால், பலரும் இதை உபயோகிப்பதால் புகையிலை வரியினால் நல்ல வருமானம் கிடைக்கிறது. மேலும் இந்த வரியினால் புகையிலையின் வரி ஏறுவதால் அதை மக்கள் உபயோகிப்பதும் குறையும்.

அது போலவே மதுபான வகைகளின்மேல் விதிக்கப்படும் வரிகளும் மக்களுக்கு நன்மை பயக்கக் கூடியவை.

பணக்காரர்கள் மட்டும் உபயோகிக்கும் பொருள்கள், உதாரணமாக விலையுயர்ந்த பட்டு ஜவுளிகள், உயர்ந்தரக வாசனைத் திரவியங்கள், பெட்ரோல் இவைகளின் மேல் வரி விதிக்கப்படுவதில் தவறில்லை. பல பொருள்களின்மேல் சிறிய சிறிய வரிகளை விதித்து எல்லோருக்கும் சிரமம் தருவதைவிடப் பணக்காரர்கள் மட்டும் உபயோகிக்கும் பொறுக்கியெடுத்த சில பொருள்களின்மேல் கணிசமான வரிகளை விதிப்பது நல்லது. மது விலக்கு அமுலுக்கு வருவதற்கு முன் மது வகைகளின் உற்பத்தியின் மேல் விதிக்கப்படும் வரிகளிலிருந்து சுமார் 16 கோடி ரூபாய் வருமானம் கிடைத்து வந்தது. அதாவது சென்னை ராஜ்யத்தின் மொத்த வருமானத்தில் ஏறக்குறைய 40 சதவிகிதம் இந்த வரியிலிருந்து தான் கிடைத்தது.

சுங்க வரிகள்

சுங்கவரிகள் அயல்நாட்டுச்சாமான்களை இறக்குமதி செய்யும்போதும் உள்நாட்டு சரக்குகளை ஏற்றுமதி செய்யும்போதும் விதிக்கப்படுகின்றன. அரசாங்கம் தன் வருமானத்தை அதிகரித்துக்கொள்ளவும் உள்நாட்டில் உற்பத்தியாகும்சரக்குகளை வெளிநாட்டுச் சரக்குகளின் போட்டியிலிருந்து பாதுகாக்கவும், இறக்குமதி வரிகள் விதிக்கப்படுகின்றன. சில சமயங்களில் வருமானத்துக்காகவும், உள்நாட்டில் உற்பத்தியாகும் சரக்குகளை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யாமல் தடுப்பதற்காகவும் ஏற்றுமதி வரிகள் விதிக்கப்படுகின்றன.

உள்நாட்டுத் தொழிலைக் காக்க வெளிநாட்டுச் சாமான்களின்மேல் இறக்குமதிவரி விதிக்கும் போது அந்த நோக்கம் நிறைவேறினால் அதிக வருமானம் கிடைக்காது. அப்படி வருமானம் அதிகம் வந்தால் அந்த வரியினால் உள்நாட்டுத் தொழிலுக்கு எதிர்பார்த்த பாதுகாப்பு கிடைக்கவில்லை என்றுதான் அர்த்தம். வருமானம் அதிகம் என்றால் அதிக இறக்குமதி நடக்கிறதென்றும் உள்நாட்டு சாமான்களுக்கு காப்பு இல்லை என்றுவெளிநாட்டுச் சாமான்களே அதிகம் விற்பனையாகின்றன என்பதும்தான் அர்த்தம்.

சுங்கவரி இரண்டு விதமாக வசூலிக்கப்படலாம். சரக்குகளின் விலையின் மேல் நான்கிலொரு பாகம் என்றோ ஐந்திலொரு பாகமென்றோ விதிப்பது ஒரு முறை. சரக்குகளின் எடையைப் பார்த்து இவ்வளவு நிறைக்கு இவ்வளவு வரி என்றோ, அல்லது துணி போன்ற வஸ்துகளாயிருந்தால் ஒரு கெஜத்துக்கு இவ்வளவு என்றோ விதிப்பது மற்றொரு முறை.

வெளி நாட்டிலிருந்து தருவிக்கப்படும் பொருள்கள் அவசியத் தேவைப் பொருள்களாயிருந்தால், அவைகளின் மேல்அதிக வரி விதித்தால் பெருவாரியான மக்கள் சிரமப்படுவார்கள். உள் நாட்டில் அப்பொருள்கள் கிடைக்கவில்லை என்ற காரணத்தால்தான் அவை தருவிக்கப்படுகின்றன. நாட்டில் அப்பொருள்களின் உற்பத்தி பெருகும் வரை அந்நிய நாட்டை எதிர்பார்த்திருக்க முடியாதுதான். அவைகளின் மேல் வரிவிதிப்பது தவறு.

பணக்காரர் உபயோகிக்கும் போகப் பொருள்களை இறக்குமதி செய்யும்போது வரி விதித்தால் அதில் தவறில்லை. இறக்குமதி தடை செய்யப்பட்டாலும் அதனால் பெருவாரியான மக்களுக்குச் சிரமம் ஏற்படாது. வருமானத்தை உத்தேசித்து அரசாங்கம் அம்மாதிரிப் பொருள்களின் மேல் அதிக வரியை விதித்தாலும்பரவாயில்லை. அதனால் பாதிக்கப்படுபவர் பணக்காரர்கள் மட்டுந்தான்.

வெளி நாட்டுச்சாமான்கள் நமது நாட்டில் இறக்குமதியாகும் போது விதிக்கப்படும் வரியின் சுமை யார் பேரில் உண்மையில் விழுகிறது என்பது பல காரியங்களைப் பொறுத்திருக்கும். நம் நாட்டுக்குமிகத்தேவையானதும் நம் நாட்டில் தயாரிக்கப்படாததுமான ஒரு பொருளாயிருந்தால் அதன் மேல் விதிக்கப்படும் இறக்குமதி வரியை நாம் தான் செலுத்துகிறோம். ஏனெனில் அதன் விலை ஏறினாலும் அதை விட்டாலும் வழியில்லை என்பதால், நமக்கு மிகவும் தேவையில்லாததும் நம் நாட்டில் உற்பத்தியாகும் ஒரு பொருளாயிருந்தால் இறக்குமதி வரி விதிக்கப்படும் போது அதன் விலை ஏறுமாதலால் நம் நாட்டில் அதற்கு கிராக்கி குறையும் அதனால் வெளி நாட்டு வியாபாரி அதைத்தானே செலுத்தி விடுவார்.

தென்னாற்காடு மாவட்ட இரண்டாவது தி.மு.க. மாநாடு

சிதம்பரத்தில்

ஜுலை 4, 5 தேதிகளில்

நடைபெறும்.

நடைபெற்றவை

முறப்பநாடு; 23—5—53 மாலை எஸ். வீரபாகு தலைமையில் தி.மு.க. துவக்க விழா நடைபெற்றது. தோழர்கள் எம். ஆர். கணேசன், ஏ. திராவிடமணி, எஸ். கந்தசாமி ஆகியோர் பேசினர்.

வண்டிப்பெரியார்: (கேரளப் பகுதி) 24—5—53 மாலை தி.மு.க. துவக்கவிழா கம்பம் எஸ். சுருளி தலைமையில்நடைபெற்றது. கடலூர் ராமசாமி, கே. எ கலையழகன் ஆகியோர் பேசினர்.

பொன்னமராவதி: 26-5—53 மாலை தி மு. க. ஆண்டுவிழா நடைபெற்றது. மெ. சுந்தரம், பி.ஒ.எல்., ஈ. வெ. கி- சம்பத், அ. பொன்னம்பலனார் ஆகியோர் பேசினர்.

சென்னை: 29-5-53 சிந்தாதிரிப் பேட்டை தி மு. க. கிளையின் புது நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். செயலாளர்: எம். ஏ. கரிகாலன். துணைச்செயலாளர் நெல்லை வேணுகோபால், பொருளாளர் ஆ.ச. வேலன், மாவட்டப் பிரதிநிதிகள் நெல்லை வேணுகோபால், இராமச்சந்திரன்.

சென்னை மாவட்ட இரண்டாவது தி மு. க. மாநாடு

சென்னையில்

ஜுலை 11, 12 தேதிகளில்

நடைபெறும்.

தயாராகிறது!

தில்லை-வில்லாளன்

தீட்டிய

முதல் நாடகம்

பேசும் படம்

விவரங்கட்கு:-

தம்பி வெளியீடுகள்

சிதம்பரம்

★ அரக்கோணம் பொதுக்குழு—தீர்மானங்கள் ★

அனுதாபமும் பாராட்டும்

அரக்கோணம் பொதுக்குழுவில் தி. மு. க. பொதுச் செயலாளரால் பிரரேபிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:—

அனுதாபம்

சுயமரியாதை இயக்கத் தலைவராக இருந்து அரிய பணியாற்றிய சௌந்தரபாண்டியனார், அறிவியக்கத்துக்காக அரும்பாடுபட்ட கைவல்யம்; பொருளாதாரப் பேரறிஞர் ஆர்.கே. சண்முகம், சோவியத் சிற்பியும் உலகப் பாட்டாளி இயக்கத் தலைவருமான ஸ்டாலின் ஆகியோரின் மறைவு குறித்து பொதுக்குழு தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

புயல் நிவாரண நிதிக் குழுவுக்குப் பாராட்டு

சென்ற பொதுக்குழுவின் தீர்மானத்திற்கிணங்க, தஞ்சை - திருச்சி புயல் நிவாரணத்துக்காக 27535 ரூபாய் அளவுக்கு நிதி திரட்டி உதவிய, மு. கருணாநிதியைச செயலாளராகவும், தோழர்கள் கே. கே. நீலமேகம், ஈ.வி.கே. சம்பத், கே.எ. மதியழகன், வில்லாளன், பொன்னம்பலனார், கே. ஆர். ராமசாமி ஆகியோர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட புயல் நிவாரணத் தனிக் குழுவை இப்பொதுக்குழு பாராட்டுவதுடன், மேற்படி குழுவினரின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறது.

கைத்தறித் துணி விற்பனை தினத்தின் வெற்றி

கைத்தறியாளரின் கஷ்டத்தைப் போக்க, பொதுமக்கள் கைத்தறித் துணிகளை ஆதரிக்கச் செய்வதற்காக, கழகத் தோழர்கள் கைத்தறித் துணிகளை பல ஊர்களில், தெருக்களில், விற்பனை செய்வது என்று சென்ற பொதுக் குழுவில் செய்யப்பட்ட முடிவினை, 4-1-53 அன்று கழகத் தோழர்கள் தங்கள் உழைப்பாலும் ஆற்றலாலும் வெற்றிகரமாக நிறைவேற்றி சழகத்தின் கண்ணியத்தை உயர்த்தித் தந்தமைக்காக, கழகத் தோழர்களுக்குப் பாராட்டும, இந்த முயற்சிக்கு ஆக்கம் தந்ததற்காகப பொது மக்களுக்கு நன்றியறிதலையும் இந்தப் பொதுக் குழு தெரிவித்துக்கொள்கிறது.

செய்யாமலிருக்கும் சர்க்காரின் போக்கை இப் பொதுக் குழு கண்டிப்பதுடன், தொழிலாளரின் வாழ்வுரிமை பற்றி உடனடியாக சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்துகிறது.

என். வி. நடராசன்
கோவை ராசமாணிக்கம்

கம்யூனிஸ்டு கட்சி போக்கு கண்டு வருத்தம்

பிற்போக்காளரின் ஆட்சியை அகற்றவும் முதலாளித்வத்தை முறியடிக்கவும் பாடுபடும் முற்போக்குக் கட்சி என்ற முறையில் தி. மு. க., கம்யூனிஸ்டு கட்சிக்கும், கூடுமான வரையில் ஒத்துழைப்பு அளித்தும் வருகிற நிலைக்கு மகிழ்ந்து நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கும் கம்யூனிஸ்டு கட்சி பொதுவாகவே பல இடங்களில் தி. மு. க. வின் திட்டங்களைக் கேலி செய்தும், தூத்துக்குடி போன்ற இடத்தில் தி. மு. க. உறுப்பினர்களைத் தாக்கியும் வருவது கண்டு இப்பொதுக்குழு, கம்யூனிஸ்டு கட்சியின் போக்கைக்கண்டு வருந்துவதுடன், தோழமையை இழந்துவிட கம்யூனிஸ்டுக் கட்சி விரும்புவதாக இப்போக்குக் காட்டுவதால், கம்யூனிஸ்டுக் கட்சியின் போக்கு விரும்பத்தக்க முறையில் மாறுகிறவரையில், கம்யூனிஸ்டுக் கட்சியுடன் தொடர்பு வைத்து, பொதுப் பிரச்சினைகளுக்காகக் கூட்டுக் கூட்டம நடத்துவதை தி.மு.க. நிறுத்திக் கொள்வதென்றும், பல நகரசபைகளில், தி. மு. க. வுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் ஏற்பட்டுள்ள கூட்டணி முறை இனித் தேவை இல்லை என்று அந்தந்த நகரசபை கூட்டணிக் கூட்டத்தில் ஈடுபட்டுள்ள தி. மு. க. உறுப்பினர்கள், இறுதி எச்சரிக்கை தந்துவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்வதென்றும், தொழிலாளர் இயக்கத்தில் தி. மு. க. ஈடுபடுவது, முற்போக்குக்கு உகந்தது என்ற மதிப்பூமல், எங்கெங்கு தொழிலாளர் சங்கங்களைத் தி. மு. க. நடத்திவருகிறதோ அங்கெல்லாம் கம்யூனிஸ்டுகள் கடுமையான பலாத்காரத்துக்கும் தயாராகி வருகிறார்கள் என்பது விளங்குவதால், தி. மு. க. மேலும் தொழிலாளர் சங்கங்களை நடத்திச் செல்லும் முறையில் பணியாற்றுவது என்று இப்பொதுக் குழு தீர்மானிக்கிறது.

போதுச் செயலாளர்.

டால்மியாபுரம் போராட்டம் பொதுக்குழு வேண்டுகோள்

தமிழகத்தின் ஒரு பகுதியான கல்லக்குடி வட்டாரத்தில் வடநாட்டு முதலாளித்வ ஆதிக்க அறிகுறியாகவும், திராவிடரின் தன்மானத்தை அழிக்கும் அவமானச் சின்னமாகவும், டால்மியாபுரம் என்று பெயரிட்டிருக்கும் இழிவு துடைக்கப்பட வேண்டும் என்று திருச்சி மாவட்டத்தில் லால்குடி மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவை, இப்பொதுக்குழு வரவேற்பதுடன், மேற்படி போராட்டத்துக்காக அமைக்கப்பட்டிருக்கும் குழு பொதுச் செயலாளரைக் கலந்து கொண்டு பணியாற்ற முன் வந்திருப்பதைப் பாராட்டி, கழகத் தோழர்கள் இக்கிளர்ச்சிக்கான ஆதரவைத் திரட்டித் தந்து மேற்படி போராட்டம் வெற்றிபெறச் செய்புமாறு இப்பொதுக் குழு, கழகத் தோழர்களைக் கேட்டுக் கொள்கிறது.

எ. வி. பி. ஆசைத்தம்பி
நெல்லை வீரபாகு

இலங்கை வாழ் திராவிடர் நிலை

இலங்கையில் சென்ற திங்கள் சுற்றுப் பயணம் செய்துவிட்டு வந்த தோழர்கள் சிற்றரசு தங்கப் பழம் ஆகியோர், இலங்கை சர்க்காரின் போக்கு, அரசியல் கிளர்ச்சிகளின் தன்மை, கட்சிகளின் நடவடிக்கைகள். திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சி ஆகியவை பற்றி விளக்கியதன் மூலம், இலங்கை நிலைமை அறிந்து, பொதுக் குழு, இலங்கை வாழ் திராவிடர்கள் குறித்த பிரச்சினையின் முக்யத்வத்தை உணர்ந்து. மேலும் மேலும் அதிகமான அளவு அந்தப் பிரச்சினை பற்றிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று உறுதி கொள்கிறது.

போதுச் செயலாளர்

திருத்தணி அறப்போர் - தி. மு. க ஆதரவு

"மொழி வழி அரசு அமைப்புக்காக, மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானப்படி, தமிழகத்துக்குச் சொந்தமான சித்தூர் மாவட்டத்தை அத்துடன் சேர்க்காது, வடநாட்டு ஆதிபத்ய அரசு ஓரவஞ்சனையாகவும், திராவிடத்திலே உட்பூசல் கிளப்பும் நோக்குடனும் நடந்து கொண்டதைக் கண்டிப்பதுடன், உரிமையை நிலைநாட்ட சித்தூர் மாவட்டத்தில், திருத்தணியில் நடத்தப்பட்ட அறப்போரில், வடாற்காடு சித்தூர் மாவட்டத் தோழர்கள் தம் பங்கினைச் செலுத்தியது கண்டு மகிழ்ந்து பாராட்டுவதுடன், மேற்கொண்டு அறப்போர் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்வதற்கு, முதற்படியாக சித்தூர், வடாற்காடு, சென்னை, செங்கற்பட்டு மாட்ட கிளைக்கழகங்களின் கருத்தை ஒட்டி, ஒரு தனிக் குழு அமைத்து அறப்போர்த் திட்டம் வகுத்துக் கொடுக்க, பொதுச் செயலாளருக்குப் பொதுக் குழு அனுமதி அளிக்கிறது"

எனும் தீர்மானம் தோழர் கே. எ. மதியழகன் பிரரேபிக்க தோழர் எ. எல். சி. கிருஷ்ணசாமி ஆமோதிக்க நிறைவேற்றப்பட்டது.

ஐந்தாண்டுத் திட்டம் : ஓர் பெரும் சதி

பொதுமக்களின் நலனைப்பேணத் தவறியதை மறைத்து, உலகில்வீண் விளம்பரம் செய்து கொள்வதற்காகத் தீட்டப்பட்டு, அமுல் நடத்தப்பட்டு வரும் ஐந்தாண்டுத் திட்டம் முதலாளித்துவ ஆதிக்கத்தையும் அமெரிக்க ஏகாதிபத்யப் பிடியையும் அதிகரிக்கச் செய்யவும், வடநாட்டை தொழில் வளமிகுந்த முதலாளித்துவ பாசறையாக்கி, திராவிடத்தை விவசாய வேட்டைக்காடாக்கவும் பயன்படும். பயங்காச் சதித்திட்டம் என்று பொதுக்குழு கருதுவதுடன், திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டுள்ள கருத்தை உறுதிப்படுத்தும் முறையில், ஐந்தாண்டுத் திட்டத்தின் இரண்டாண்டுகள் கழிந்தும், பெரும் பொருள் செலவாகியும், திராவிடம் இம்மியளவும் நலன் பெறவில்லை என்பதை எடுத்துக்காட்டுவதுடன், திராவிடத்தின் எதிர்காலத்துக்கு ஊறுதேடவும் ஐந்தாண்டுத் திட்டத்தை மேலும் அமுல் நடத்துவது, திராவிடத்துக்கு இழைக்கப்படும் துரோகச் செயல் என்று இப் பொதுக்குழு எடுத்துக் காட்டித் தன் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஈ. வெ. கி. சம்பத்,
அரங்கண்ணல்.

தொழிலாளர் குறை போக்குக

மின்சார உற்பத்திக் குறைவு என்ற பேரால், கோவை, மதுரை, சேலம் போன்ற நகரங்களில், பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்தும், போதிய இலாபமில்லை என்ற காரணத்தின் பேரால் சென்னை டிராம்வே கம்பெனி முதலாளி ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை வேலை இழக்கச் செய்து அவதிக்குள்ளாக்கி இருக்கும் கொடுமையைக் கண்டும், குறைகளுக்கு உருவான பரிகாரம் ஏதும்

6-ம் பக்கத் தொடர்ச்சி

தொங்கவிட்டு, "இதோபார், இது தான் கழுதை" "அதோபார். அது தான் மரம்" என்று கற்றுக்கொடுத்தால் முதியவர்கள் அதாவது கல்வி கற்காத பெரியவர்கள் மிகவும் எளிதாகக் கல்வி அறிவு பெற்று விடுவார்கள் என்று கூறினர். அதற்காக ஒரு புத்தகமும் எழுதி வெளியிட்டார். அந்தப் புத்தகத்திற்குப் பெயர் என்ன தெரியுமா?

"தம்பி வா"

என்பது. முதியவரை, பெரியவரை, 'தம்பிவா' என்று அழைக்க வேண்டுமென்ற 'அதியற்புதமான' கல்வித் திட்டத்தைக் கொண்டு வந்தவர்தான் இப்போது அதிகாரமமதை என்னும் ஆயுதத்தைக் கையில் வைத்துக்கொண்டு, சின்னஞ் சிறுவர்களைச் சின்னாபின்னமாக்கும் கல்வித் திட்டத்தைச் சட்டமாக்குகிருர் — யாரையும் சட்டை செய்யாமல்.

தமக்குத்தான் கல்வித் துறையில் கரை கடந்த அனுபவம் இருப்பதாக எண்ணிக் கொண்டிருக்கும் இவர்—ஆச்சாரியார்—கல்வி கற்பது எப்படி என்பது பற்றி முன்பொருமுறை ஒரு 'அபூர்வமான' இன்னொரு யோசனையையும் கூறினர். அதாவது, "குழந்தைகள் பன்னிரண்டு வயது வரைக்கும் பள்ளிக்கூடத்துக்குப் போகக்கூடாது—தாய் தகப்பனே, அல்லது அக்கம் பக்கத்தாரோ—படித்தவர்கள்—குழந்தைகளுக்குக் கல்வி கற்றுத் தந்தால், அதுவே போதும்" என்பதாகக் கூறியவர் தான் இப்போது இந்த திட்டத்தைக் கூறியிருக்கிறார், அல்ல, அல்ல, சட்டமாக்கி இருக்கிருர்.

எங்கே இந்தக் கல்வித் திட்டம் அமுலுக்கு வருகிறது தெரியுமோ? நகரங்களிலா? இல்லை! அவ்வளவு அறியாமை நிரம்பியவரா ஆச்சாரியார்! பின்னால் நிகழப் போவதை முன்கூட்டியே தெரிந்து செயலாற்றக் கூடியவரல்லவா அவர். நகரங்களில் இத்திட்டத்தைப் புகுத்தினால், அது ஒரு நாளில் நசுக்கி எறியப்படும் என்பது அவருக்குத் தெரியும். எனவே அதனை நகரங்களில் புகுத்தாமல், மேஜர் பஞ்சாயத்துக்களில் கூடப் புகுத்தாமல், உலகவிவகாரங்கள், அரசியல் நுட்பங்கள் எதுவும் எளிதில் புகமுடியாத—புரிந்து கொள்ள முடியாதவர்களே பெரும்பாலராகவுள்ள மைனர் பஞ்சாயத்துக்கள் உள்ள சிறு கிராமங்களில் தான் இத்திட்டம் முதலில் அமுலுக்கு வரும் என்று அறிவிக்கிருர் ஆச்சாரியார். அதிலும் கல்வி அறிவு எங்கே மிக மிகக் குறைவாக இருக்கிறதோ அங்கு தான் மேலும் மேலும் அறிவை அழிக்கும் இத்திட்டத்தை அமுலாக்கபார்க்கிருர். அவருடைய 'இராமராஜ்யக் கொள்கை" வெற்றியடைவதற்கு என்னென்ன வழிகள் செய்ய முடியுமோ அவற்றை எல்லாம் செய்யப் பார்க்கிருர்.

தன் காலத்தில் தம்மவர்களுக்கு என்னென்ன நன்மைகள் செய்ய முடியுமோ அவற்றை எல்லாம் செய்து விட்டுப் போய்விடலாம்—அதற்கு எதிர்பாராத விதமாக அதிகாரமும் கிடைத்திருக்கிறது — சட்டம் கையிலிருக்கிற சமயத்தில் தீட்டுவோம் திட்டங்களை—என்று எண்ணிக் கொண்டு காரியமாற்றுகிருர். இதனைக் காங்கிரசிலிருக்கும் பார்ப்பனரல்லாதாரின் நலனில—நல்வாழ்வில் நாட்டங் கொண்ட நண்பர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

இதில இன்னொரு சிந்திக்கவேண்டிய ஒன்றும் இருக்கிறது. அதாவது, மைனர் பஞ்சாயத்துக்கள் உள்ள கிராமங்களில் வாழ்பவர்கள் பெரும்பாலும் அதாவது நூற்றுக்குத் தொண்ணூற்றிரெண்டேமுக்காலும் நம்மவர்களே. மொழியப் பார்ப்பனர்

(2-ம் பக்கம் பார்க்க)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாமத்தை நிலைநாட்டப் போகிறேன்' என்று கமண்டலமேந்தி, காஷாயம் தரித்து, கானகம் நோக்கிச் செல்லவில்லை. வேத புத்தகங்களைப் புரட்டிடுவதற்குப் பதில் சட்ட நூற்களைப் புரட்டி, அருமையான காரில் சென்றபடி, அமெரிக்கன் தந்த பேனாவைத் திறந்து, புதுச் சட்டம் தீட்டுகிறார்! அதைச் சர்க்கார் மூலம் நிறைவேற்றப் போகிறார்!!

வசிஷ்டர் காலத்தில், முடியாத காரியம்—இந்த ஆச்சாரியார் காலத்தில முடிகிறது!

"ஹே! ராஜன்—ஆறு காலப் பூஜையையும் சரிவரச் செய். யாக யோகாதி காரியங்களுக்கு ஏற்பாடாகிவிட்டதா?"—என்று, கங்கைக் கரை புகுந்த, அந்த நாள் ஆரிய முனிவர்கள், அரசனைத்தான் கேட்க வேண்டியிருந்தது.

ஆனால், இந்த நாள், ஆச்சாரியார் 'ஆறுகாலப் பூஜையைச் சரியாக நடத்து! ஆரிய—க்ஷத்திரிய—வைசிய—சூத்திரர்—நால்வகைச் சாதி முறையும் காக்கப்படவேண்டும்" என்று, தானே சட்டம் போடுகிறார்.

சாணக்கியன் காலத்தில் அவன் சொற்படி கேட்க, சந்திரகுப்தனிருந்தான். சாணக்கியனால், சட்டம் செய்யமுடியாது; சந்திரகுப்தன் தேவைப்பட்டான்.

ஆனால் 'இந்த'ச் சாணக்கியரை, 'ஏன்?' என்று கேட்பாரில்லை—ஏனெனில், இவர்தான், அரசுத் தலைவர்! எனவேதான், உத்தரவிடுகிறார்!!

ஆரிய மதம், உத்தரவிட்டு அறியாதது.

ஆனால், இன்று, ஆச்சாரியார் உருவில், அந்த நிலையையும் எட்டிப் பிடிக்கிறது.

ஐயகோ! தோழர்காள்! புதுயுகம் மலர்கிறது என்று பூரிப்போடு தோள் தட்டுகிறீர்களே, உங்கள் காலத்திற்றான், காய்ந்தபுல், அரியாசனத்திலிருந்து அட்டகாசம் செய்கிறது! வர்ணாச்சிரம தர்மம் காக்கப்படவேண்டும்—வளர்க்கப்படவேண்டும்—இதுபோல், இதுவரை, பேசியோரையும், எழுதினோரையும் மட்டுமே கண்டிருக்கிறோம். இப்போது, 'உத்தரவிடும்' விசித்திரத்தையும் காண்கிறோம். இந்த விசித்திரத்தின் விதகர், ஆச்சாரியாராக இருக்கிறார்!

சாதி முறைகள் ஒழிந்து இந்த சாதிக்கு இந்தத் தொழில் என்றிருக்கும் முறை அழிக்கப்பட்டு, எல்லோரும் மனிதன், அவனவன் இஷ்டப்படி வாழலாம் எனும் உரிமைகள் வழங்கப்பட்டு வரும் இந்தக் காலத்தை காட்டுமிராண்டிக் காலத்துக்கு இழுத்துச் செல்ல முன் வருகிறார் ஆச்சாரியார். என்ன துணிச்சல்! எங்கிருந்து வந்தது, இத்துணிச்சல்?

சூத்திரன், வேதவார்த்தைகளைக் கேட்டுவிட்டால், அவன் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று—இது, 'மனு' வகுத்த கோட்பாடு.

இது, காலத்தால் மாற்றப்பட்டு, ஏதோ ஓரிருவர், படித்துப் பரிபக்குவம் அடைந்து வருகின்றனர், 'சூத்ரஜாதி'யில். இதனை, மீண்டும் மாற்றியமைக்கச் சட்டம் தீட்டுகிறார், ஆச்சாரியார்.

"நாவிதன் மகனுக்கு நாவிதத் தொழில், வண்ணாரின் குழந்தைக்கு வண்ணாரத் தொழில், குயவர் குழந்தைக்கு குயவர் தொழில், கொத்தனார் குழந்தைக்கு கொத்துத்தொழில் ......இவ்விதம் அந்தந்தக் குழந்தைகளின் குடும்பத்துக்கு எதேது பரம்பரைத் தொழிலோ, அதுதான் இனி மேல் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்கப்படும்.

கூட்டத்தில், தெரிவிக்கவில்லை, ஆச்சாரியார்! சட்டம போட்டிருக்கிறார்!!

குழந்தைகளுக்கு ஒவ்வொரு நாளும் 3-மணிநேரமட்டுமே, புத்தகப் படிப்புத் தரப்படுமாம். பிறகு, அவரவர்கள், தத்தமது பரம்பரைத் தொழிலில் பயிற்றுவிக்கப்படுவார்களாம்.

இந்த முறை வரும் ஜூலை முதல், நாடு முழுமையும் நடைபெறப் போகிறதாம்.

குலத்தொழில்! பரம்பரைமுறை!!

இவ்வாசகங்களோடு, சட்டம் பிறந்திருக்கிறது. இதனைத்தான் வர்ணாச்சிரம தர்மம், என்று கூறுவது. இதனை அமுல் நடத்தத்துடிக்கிறார், ஆச்சாரியார்.

அந்தந்த ஜாதியினர், அந்தந்த தொழில்களைக் கற்க வேண்டுமாம்.

இந்தக் கருத்தை முன்பொரு தடவை சலவைத் தொழிலாளர் மாநாட்டில் தெரிவித்தார் ஆச்சாரியார். 'பித்தபோதை!' எனக்கருதினோம். இப்போது, 'என் சித்தமே, அதுதான்!' என்று தெரிவிக்கிறார்.

"இவ்விதம் சட்டம் பிறப்பிக்க யார் காரணம்? காங்கிரஸ்கட்சியா!"

ஆ:- "இல்லை!"

"கல்வி நிபுணர்கள் கூறினார்களா?"

ஆ:- "இல்லை!"

"பின் யார் காரணம்?"

ஆ:- "நானேதான்—இது சரியானதென்று என்மனதில் படுகிறது. நான், செய்கிறேன். புத்தர், இயேசு, ராமானுஜர் போன்றோர், தாங்கள் செய்யப் புகுந்த காரியங்களுக்குப் பிறரையாயோசனை கேட்டார்கள்?"

ஆச்சாரியாரின், பதில் இது! 'நான் விரும்பினேன்!' என்று துணிந்து கூறுகிறார்!!

*

ஆச்சாரியார் கொண்டுவந்திருக்கும் இந்தக் கல்வித் திட்டத்தை, நாடு முழுமையும்—'மித்திரன்' கும்பலைத்தவிர; — எரிச்சலோடு கண்டிருக்கிறது.

பேராசிரியர்கள்
கல்வி நிபுணர்கள்
ஆரம்ப ஆசிரியர்கள்
அறிஞர்கள்
புதுயுகவாதிகள்

எல்லோரும்கண்டிக்கிறார்கள். இந்த முறை, 'இருட்டுக்குள் எதிர்காலத்தைப் பூட்டுவதுபோலாகும்' என்று கூறுகிறார்கள். அதனைக் கேட்கும் ஆச்சாரியார் கூறும் பதில், "அவர்கள் அப்படித்தான் கூறுவார்கள்!" என்பதாகும்.

"அனைவருக்கும் ஏற்காத ஒரு திட்டத்தைஏன்புகுத்துகிறீர்கள்?"

"ஏன்? — நாட்டில், படித்தோருக்கு வேலையில்லை! ஆகவே வேலையோடு அவர்களுக்கு படிப்புமுறை இருக்கவேண்டும்."

நாட்டில் வேலையில்லையாம்—அதனால் வேலைகளில் மக்களைப் பழக்கப் போகிறாராம்.

நாட்டில் செய்யப்பட வேண்டிய வேலைகள் ஏராளம் இருக்கின்றன! ஆனால், அந்த வேலைகளில், மக்களை ஈடுபடுத்த சர்க்காருக்குத் தான் திறமை யில்லை!!

ஆனால் ஆச்சாரியாரோ, நாட்டு மக்களில் நூற்றுக்கு நூறுபேரும் படித்துவிட்டுத்திண்டாடுவதுபோல் தெரிவிக்கிறார்.

நமது பூமியில் படித்தோர், நூற்றுக்குப் பத்துபேர்கூட இல்லை.

இந்நிலையில் இத்தகைய திட்டம் எங்கே கொண்டுபோய்விடும்? மேட்டில்வாழும் 'அக்ரகாரம்' உய்யவும், உழைத்து வாழும் 'குடியானவன்' மீளா அடிமையில் கிடந்து உழலவும், வழி வகுக்கும் நோக்கம் தவிர வேறென்ன?

தமது சுயநலத்தை மறைக்க தொழிற் கல்வி எனும் நல்லாடையைப் போர்த்த விரும்புகிறார்.

அவர் கூறுவதையே, வாதத்துக்கு ஒப்புக்கொள்வோம்—இதுவா, தொழிற் கல்வி?

விஞ்ஞானம் 'டிராக்டரை'யும், 'ஷேவிங் செட்'டையும் கண்டுபிடித்திருக்கும் நேரத்தில், இந்தக் கல்வி, எதற்குப் பயன்படும்?

அவ்விதம், தொழிற் கல்வியென்றே வைத்துக்கொண்டாலும். அவரவர் பரம்பரைத்தொழிலிலேயே பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்பதேன்?

அதிலும் நகரத்துக்கும், கிராமத்துக்குமிடையிலே இருக்கும் வேற்றுமைகள் விரிந்துகொண்டிருக்கும் இந்நேரத்தில், இந்தக் கல்விமுறை, கிராமங்களுக்குமட்டும் என்பதன் பொருளென்ன?

அவ்விதம், மக்களுக்கு நன்மை பயக்குமென்றே வைத்துக்கொள்வோம். எவருக்கும் தெரியாமல், யாரையும் கலக்காமல், அவசரக் கோலமாக, இதனைச் சட்டமாக உத்தரவிடவேண்டிய அவசியம் என்ன? — பிறரைக்கூடக் கலக்க வேண்டாம்; அவர்கள் எதிரிகள். ஆனால், சொந்தக் கட்சியாம், காங்கிரசைக்கூட கலக்கவில்லையாமே!

*

ஆச்சாரியார் ஆட்சியில், நாடு நன்மையடையாததுமட்டு மல்ல — நாட்டைத்தனதுவகுப்பாரின்வேட்டைக்காடாக ஆக்கிச் செல்வதென்கிற முடிவுக்கும் வந்துவிட்டார்.

அதன் விளைவுதான் இன்று, வர்ணாச்சிரமமுறை, கல்வித் துறையில் அமுல் செய்யப்படப்போகிறது.

இந்த முறை முன்பு அவரால் புகுத்தப்பட்ட இந்தி ஆதிபத்தியத்தைவிட, மிக மிகக் கேடு பயக்கக் கூடிய முறை.

நாமெல்லாம் இதுவரை, எந்தப் பாலைவனத்தைப் பசும் சோலையாக்கப்பாடுபட்டோமோ, அதனை மீண்டும் பாலையாக்கும்முறை.

சூதோடு கொண்டுவரப்படுவது! இதன் சூத்ரதாரி, ஆச்சாரியார்!!

இத்திட்டம் அமுலானால், பார்ப்பனரல்லாத சமுதாயம், படுகுழியில் வீழ்ந்துவிடும்.

அதனாற்றான், தி. மு. க. ஆச்சாரியாரின் இத்திட்டத்தை எதிர்க்கிறது.

தி. மு. க. மட்டுமல்ல, பூத்து வரும் புதுயுகத்தின்பால் ஆர்வங் காட்டும் எவரும — இதனை சாதாரணமாகக் கருதமுடியாது.

காங்கிரஸ் திராவிடரைப் பழி வாங்கும் ஆசையில்தான், ஆச்சாரியார் இத்திட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்.

*

முன்பொருமுறை அன்பர் ஆச்சாரியார் ஒரு கல்வித்திட்டம் கொண்டு வந்தார். 'கழுதை' என்று ஒரு அட்டையில், 'மாம்' என்று ஒரு அட்டையில், இப்படி ஒவ்வொன்றின் பெயரையும் அட்டைகளில் எழுதி, கழுதையின் கழுத்திலும், மரத்தின் கிளையிலும், மற்றவற்றின் மற்றப்பாகங்களிலும்

(5-ம் பக்கம் பார்க்க)

மகிழ்வூட்டும் செய்தி!

தி. மு. க. தின இதழ்
ஜூன் 15-ல் வெளிவருகிறது.

கழகத்தின் சொந்த இதழ் | நம் நாடு | கழகத்தின் செல்வக் குழந்தை

பாலூட்டிச் சீராட்ட வாரீர், விரைந்து.

*

கழக நிகழ்ச்சிகளை, கருத்துரைகளை 'நம் நாடு' உங்கள் இல்லம் கொண்டுவந்து, உங்கள் இதயத்தில் பதியச் செய்யும்.

★

இருட்டடிப்பு நீங்கிற்று— ஒளிதர வருகிறது
*
திராவிடத்தின் உரிமை முரசு
*
தி. மு. க. வளர்ச்சியில்— புதிய கட்டம்
*

நம் நாடு

தி. மு. க. தோழர்கள் ஆதரவு தாரீர்.

★

'நம் நாடு' டிம்மி சைஸ் 4 பக்கம் தனி இதழ் 1 அணா.
ஆசிரியர்: அண்ணாதுரை.

ஏஜண்டுகள் விபரம் அறிய உடனே எழுதவும்.

நம் நாடு—அறிவகம்—ராயபுரம்—சென்னை-13.

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.